பிரதம செயலாளர் செயலகம், வட மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය- උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை
කන්තියා පාර, වරෝතයනකර්, ත්‍රිකුණාමලය.
Website: www.np.gov.lk Kanniya Road, Varothayanagar, Trincomalee. e-mail:npcs@sltnet.lk


| | | |
|---|---|---|
| எனது இல. / මගේ අංකය / My No. NP/09/FRM/2008 | உமது இல. / ඔබේ අංකය / Your No. | திகதி / දිනය / Date. 23.07.2008 |

**மாகாண திறைசேரி சுற்று நிருப இல:- PT/18/2008**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்கள தலைவர்கள்,
வட மாகாணம்.

<u>மாகாண சபை அலுவலர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி வழங்குதல்</u>

15/2008ம் இலக்கமும் 21.07.2008ம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் மீதும் PT/03/2008(1)ம் இலக்கமும் 10.07.2008ம் திகதியும் கொண்ட மாகாண திறைசேரி சுற்றுநிருபத்தின் மீதும் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. (15/2008ம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

2. மேற்கூறப்பட்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆரம்ப சம்பளமாக <u>ரூபா.22,935/=ற்கு குறைவாக</u> பெறும் அலுவலர்களுக்கு 30.06.2008ம் திகதி வரை வழங்கப்பட்டு வந்த வாழ்க்கைச் செலவுப்படிக்கு மேலதிகமாக 01.07.2008ம் திகதியில் இருந்து 1,000/= வழங்கப்படுதல் வேண்டும். எனவே திருத்திய வாழ்க்கைச் செலவுப்படியாக மாதாந்தம் ரூபா. 3,500/= மட்டும் வழங்கப்படல் வேண்டும்.

3. மாதாந்த ஆரம்பச் சம்பளமாக <u>ரூபா.22,935/-ம் அதற்கும் மேலும்</u> பெறும் அலுவலர்களுக்கு 30.06.2008 வரை வழங்கப்பட்டு வந்த வாழ்க்கைச் செலவுப்படியான ரூபா.2,500/= க்கு மேலதிகமாக 01.07.2008ல் இருந்து ரூபா.375.\.ஸ்ரீ மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும். எனவே திருத்திய படியாக மாதாந்தம் ரூபா.2,875/= மட்டும் வழங்கப்படுதல் வேண்டும்.

4. அமைய ஊழியர்.\.உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் <u>வேலை செய்யும் நாள் ஒன்றுக்கு</u> திருத்திய படியாக ரூபா.116/66 சத விதப்படி மாதம் ரூபா.3,500/=க்கு மேற்படாமல் 01.07.2008ல் இருந்து வழங்கப்படுதல் வேண்டும்.

மாகாண திறைசேரி சுற்றுநிருப இலக்கம் PT/3/2008(1) இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

**ஆ.செல்லத்துரை**
**பிரதிப் பிரதம செயலாளர் - நிதி.**
**பிரதம செயலாளருக்காக**

பிரதி :-

1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர் - மாகாண பொது நிர்வாகம் - வ.மா
3. கணக்காய்வாளர் நாயகம்.
4. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வு – வ.மா

} தகவலுக்காக


பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary 060 2266501
அலுவலகம் / කාර්යාලය / Office 060 2262285
தொலை நகரி / ෆැක්ස් / Fax 026 2226952